# தேனி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2019-20

# நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி தேனி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.326/கனிமம்/2017, நாள்: 05.09.2017-ன்படி தேனி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டு, அறக்கட்டளைப் பத்திரமானது 11.09.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண்.94/IV/2017, நாள்:13.09.2017-ன்படி தேனி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண். | மேலாண்மை குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், தேனி | 1. | மாவட்ட ஆட்சியர், தேனி |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், தேனி. | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், தேனி. |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, தேனி. | 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, தேனி. |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை(DRDA), தேனி | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை(DRDA), தேனி |
| 5. | இணை இயக்குநர் (சுகாதாரம்), பொது சுகாதர மையம், தேனி. | 5. | மாவட்ட ஆட்சித்தலைவர் நேர்முக உதவியாளர், கிராம பஞ்சாயத்து வளர்ச்சி(PAPD), தேனி. |
| 6. | முதன்மை கல்வி அலுவலர், தேனி. | 6. | உதவி இயக்குநர், கிராம வளர்ச்சித்துறை, தேனி |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், தேனி | 7. | மாவட்ட ஆதிதிராவிடர் அலுவலர் |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், தேனி | 8. | செயற்பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், தேனி. |
| 9. | உதவி இயக்குநர், (கிராம ஊராட்சிகள்) தேனி | 9. | மாவட்ட வன அலுவலர், தேனி. |
| 10. | அம்பெலல் ஹென்றிச் மெமோரியல் அறக்கட்டளை, போடிநாயக்கனூர் | 10. | செயற்பொரியாளர், பொ.ப.து.., நீ.ஆ.அ.., மஞ்சளாறு வடிநிலக்கோட்டம், பெரியகுளம். |
| 11. | திரு.தங்கவேல், வட்டாச்சியர்(ஓய்வு), ஆண்டிபட்டி. | 11. | உதவி இயக்குநர் நிலஅளவை மற்றும் நிலபதிவுகள், தேனி. |
| | | 12. | மாவட்ட சமூக நல அலுவலர், தேனி |
| | | 13. | இணை இயக்குநர் (சுகாதாரம்), பொது சுகாதார மையம், தேனி. |
| | | 14. | மாவட்ட கருவூல அலுவலர், தேனி |
| | | 15. | அம்பெலல் ஹென்றிச் மெமோரியல் அறக்கட்டளை, போடிநாயக்கனூர் |
| | | 16. | திரு.தங்கவேல், வட்டாட்சியர்(ஓய்வு), ஆண்டிபட்டி. |

தேனி மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, மதுரை மெயின் ரோடு, தேனி கனரா வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்.**1020132000017)** துவக்கப்பட்டு சிறுகனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

தேனி மாவட்டத்தில் நடப்பிலுள்ள 83 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகை கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

தேனி மாவட்டத்தில் 58 கிராம பகுதிகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன. தற்பொழுது தேனி மாவட்ட கனிம அறக்கட்டளையில் வங்கி சேமிப்புக் கணக்கில் 31.03.2020 வரை ரூ. **2,18,45,106/-** (ரூபாய் இரண்டு கோடியே பதினெட்டு இலட்சத்தி நாற்பத்தி ஐந்தாயிரத்தி நூற்றி ஆறு மட்டும்) 2019-20 நிதியாண்டின் முடிவில் இருந்து வருகிறது.

தேனி மாவட்ட கனிம அறக்கட்டளை மூலம் பெறப்பட்ட தொகையில் சுரங்கம் / குவாரிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் **பிரதான் மந்திரி கானிஜ் க்ஷேத்ரா கல்யாண் யோஜனா*(Pradhan Mantri Khanij Kshetra Kalyan Yojana - PMKKKY)*** திட்டத்தின்கீழ் ரூ. 1, 47,74,000/- **(பத்து இலட்சம் மட்டும்)** மதிப்பீட்டில் 33 பணிகள் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதில் திட்டப்பணிகளில் 2018-2019 நிதியாண்டில் 31 திட்டப்பணிகளுக்கு ரூ.**1,21,49,000/-** (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஒரு இலட்சத்து நாற்பத்தி ஒண்பதாயிரம் மட்டும்) திட்டப்பணிகளை மேற்கொள்ளும் அமைப்புக்கு வழங்கப்பட்டு 2019-20-ல் ரூ.**13,46,121**/- (ரூபாய் பதிமூன்று இலட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்தி நூற்றி இருபத்தி ஒன்று மட்டும்) திட்டப்பணிகளை மேற்கொள்ளும் அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

முப்பத்தி ஒரு திட்டங்களில் இருபத்தி ஒன்று திட்டங்கள் முற்றிலும் நிறைவு பெற்று நடைமுறைப்படுத்தும் அமைப்பிடமிருந்து பயன்பாட்டுச் சான்று பெறப்பட்டு புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அவர்களின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதியாண்டு 2019-2020-ல் கீழ்காணும் இரு திட்டங்களுக்கு ரூ.**26,25,000/-** (ரூபாய் இருபத்தி ஆறு இலட்சத்து இருபத்தி ஐயாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

நிதி ஆண்டு 2019-2020-ன் திட்டங்கள்:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | உயர் முன்னுரிமையா/ பிறமுன்னுரிமை திட்டமா? |
|---|---|---|---|---|---|
| 1. | சுகாதார நோக்கம் | சீப்பாலக்கோட்டை பஞ்சாயத்தில் பிரேம்குமார் வீட்டிலிருந்து கிழக்கு வரை ஓடையிலான மழைநீர் வடிகால் அமைத்தல் | 16,95,000 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தேனி. | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| 2. | சுகாதார நோக்கம் | சீப்பாலக்கோட்டை பஞ்சாயத்தில் நாகராஜ் வீடு முதல் பிரேம்குமார் வீடு வரையிலான இரண்டு சிலாப் கல்வெட்டுடன் மழைநீர் வடிகால் அமைத்தல் | 14,35,000 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தேனி. | உயர் முன்னுரிமைத் திட்டம். |
| | | மொத்தம் | **26,25,000** | | |

நிதி ஆண்டு 2019-2020 –ல் செலவிடப்பட்ட தொகைகள்:

| வ.எண் | நோக்கம் | செலவிடப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | ஒப்பந்த பணியாளர்களின் சம்பளம் | ரூ. 2,42,000/- |
| 2. | ஒப்பந்த தணிக்கையாளர் சம்பளம் | ரூ. 11,800/- |
| 3. | தேனி மாவட்ட கனிம அறக்கட்டளை சேமிப்பிலிருந்து 1% தொகை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்ட தொகை | ரூ. 67,974/- |
| 4. | வங்கி கணக்கிலிருந்து சேவைக் கட்டணமாக பிடித்தம் செய்யப்பட்ட தொகை | ரூ. 34,710/- |
| 5. | i-Pad வாங்க செலவினம் செய்யப்பட்ட தொகை | ரூ. 84,028/- |
| | **மொத்தம்** | **ரூ. 4,40,512/-** |

25/6/2020

தலைவர்,
தேனி மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை மற்றும்
மாவட்ட ஆட்சியர்,
தேனி